# மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் முடக்கம்! ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!





மதுரை மெட்ரோ ரயில் திட்டத்தை கொண்டு வரக்கூடாது என பிடிவாதம் பிடித்து திட்டத்தை முடக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதுரை மாவட்ட தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் சார்பில் மதுரை பழங்காநத்தத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ தலைமையில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் எழுச்சி உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., பூமிநாதன் எம்.எல்.ஏ,. கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், மா.ஒச்சுபாலு, நாகராஜன், கரு.தியாகராஜன், பெ.குழந்தைவேலு, தனச்செல்வம், வக்கீல் பாலாஜி, கே.ஐ.மகிழன், ஏர்போர்ட் பாண்டியன், ஜி.பி.ராஜா, லதா அதியமான், மா.ஜெயராம், அக்ரி கணேசன், துணை மேயர் நாகராஜன், எம்.இளங்கோ, விமல், சௌந்தரராஜன் மற்றும் தி.மு.க. கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், மதுரை வடக்கு, தெற்கு, மாநகர் மாவட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்

### கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்த

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதுரையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று கண்டன முழக்கம்!

மதுரை, நவ. 22 -

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்த ஒன்றிய அரசைக் கண்டித்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் நேற்று மதுரையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர்.

சென்னையில் செயல்படுத்தப்படும் மெட்ரோ ரயில் சேவையை போன்று கோவை மற்றும் மதுரையிலும், மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசு விரிவான திட்ட அறிக்கை தயாரித்து ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருந்தது.

கடந்த 10 மாதங்களாக இந்த திட்ட அறிக்கைகள் மீது எந்த முடிவும் எடுக்காமல் கிடப்பில் போட்டிருந்த ஒன்றிய அரசு தற்போது, மக்கள் தொகையை காரணம் கூறி இந்த 2 திட்டங்களையும் நிராகரித்து திட்ட அறிக்கைகளை திருப்பி அனுப்பியுள்ளது.

அதேநேரம் கோவை, மதுரையைவிட குறைந்த அளவிலான மக்கள் தொகை கொண்ட ஆக்ரா, பாட்னா, போபால் நகரங்களின் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கையை கண்டித்து கோவையில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், இதன் தொடர்ச்சியாக ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் சார்பில் மதுரையில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை பழங்காநத்தம் ரவுண்டானாவில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி மற்றும் மு.மணிமாறன், மதுரை தி.மு.க. முன்னாள் மேயர் குழந்தை வேல், முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள், நிர்வாகி கள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

### “இளைஞர் எழுச்சி நாள்”

கழக அமைப்புச் செயலாளர் **ஆர்.எஸ். பாரதி**, அவர்கள் பங்கேற்கும்

### பொதுக்கூட்டங்கள்

| நாள் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 2025 நவம்பர் 22 | இராயபுரம் | சென்னை வடக்கு |
| ” ” 27 | புழல் | சென்னை வடகிழக்கு |
| ” ” 28 | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் | |
| ” ” 29 | விருத்தாசலம் | கடலூர் மேற்கு |
| 2025 டிசம்பர் 2 | கிணத்துக்கடவு | கோவை தெற்கு |
| ” ” 3 | திண்டுக்கல் மேற்கு மாவட்டம் | |
| ” ” 5 | சென்னை கிழக்கு மாவட்டம் | |
| ” ” 7 | திருநெல்வேலி மத்திய மாவட்டம் | |
| ” ” 8 | மதுரை தெற்கு மாவட்டம் | |
| ” ” 10 | சென்னை வடக்கு மாவட்டம் | |
| ” ” 14 | விராலிமலை | புதுக்கோட்டை வடக்கு |
| ” ” 18 | சென்னை வடக்கு மாவட்டம் | |